சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். ஓ.எஸ். 87/2021

**PW 1 செந்தில்மணி** **12.03.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் என் உடன் பிறந்த சகோதரர்கள். அவர்களுடன் எனக்கு விரோதம் இல்லை என்றால் சரிதான். என் தாயார் பெயர் பருவதம்மாள், தகப்பனார் பெயர் சின்னத்துரை. என் அப்பாவிற்கு பெரும்பதி தான் சொந்த ஊர். எனக்கு 1999 ல் திருமணம் ஆகியது. சாட்சி பின்னிட்டு 1998 ல் திருமணம் நடந்ததாக தெரிவித்தார். திருமணம் ஆனதிலிருந்து என் கணவருடன் கோவையில் வசித்து வருகிறேன். வழக்கில் சொல்லியுள்ள விலாசத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 2 ம் வாதி கற்பகம் வடக்கு காட்டில் குடியிருந்து வருகிறார். 2 ம் வாதிக்கு எப்போது திருமணம் ஆகியது என ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் எனக்காவும் என் தங்கைக்காவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். எனது சகோதரர்களான 1, 2 பிரதிவாதிகள் பெரும்பதியில் தான் குடியிருந்து வருகிறார்கள். எனக்கும் என் சகோதரிக்கும் பாகம் வேண்டும் என்று தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் தாயாருக்கு எப்போது திருமணம் ஆகியது என்று எனக்கு தெரியாது. என் தாயார் பருவதம் 1998 ல் இறந்தார். என் தகப்பனார் 1995 ல் இறந்திருப்பார் சரியாக தெரியவில்லை. இவ்வழக்கில் சொல்லியுள்ள ஸ்ரீரெங்கராஜ் எப்போது இறந்தார் என ஞாபகம் இல்லை. 2016 என நினைக்கிறேன். மயிலாத்தாள், நீலாதேவி, சரஸ்வதி ஆகியோர் ஸ்ரீரெங்கராஜின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் பெருமாள் கவுண்டருக்கு சொத்துக்கள் பாத்தியம் என்பதற்கு நானே கிராம நிர்வாக அலுவலரிடம் நேரில் சென்று தகவல் பெற்றேன் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டர் இறந்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த வருடம் இறந்தார் என உறுதியாக சொல்ல இயலாது என்றால் சரிதான். பெருமாள் கவுண்டர் மகன் கந்தசாமி கவுண்டர் 1995 ல்

இறந்தார். 1995ம் வருடம் என் தாயார் பருவதம் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். கந்தசாமி கவுண்டருக்கு வாரிசு சான்றை வட்டாட்சியர் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். கந்தசாமி கவுண்டரின் வாரிசு சான்றிதழில் ஸ்ரீரெங்கராஜீம் 3ம் பிரதிவாதி ராமராஜீம் வாரிசுகள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தின் பட்டா ராமராஜ், ஸ்ரீரெங்கராஜ் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்தின் பட்டா என் தாத்தா கந்தசாமி கவுண்டர் பெயலரில் உள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்த போது வழக்குடன் தாக்கல் செய்த பத்திரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 7வது ஆவணம் பட்டாவில் ராமராஜ் மற்றும் ஸ்ரீரெங்கராஜ் பெயரில் தான் முழு சொத்தும் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் என் பெயரிலோ என் தாயார் பெயரிலோ கந்தசாமி கவுண்டர் பெயரிலோ பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் சகோதரர்கள் இருவரும் ஸ்ரீரெங்கராஜ் ஊரான பெரும்பதியில் தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் சின்னதுரைக்கு பாத்தியப்பட்ட சொத்தும் பெரும்பதியில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் என் தகப்பனாரின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாரின் சொத்துக்கள் அனைத்தையும் என் சகோதரர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மகசூல் வருமானம் கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லை. நானோ என் தாயோரோ என் சகோதரர்களோ தாவா சொத்தை அனுபவிப்பதை சுட்டிகாட்டுவதற்கு ஆவணங்கள இல்லை என்றால் சரிதான், குத்தகை கொடுப்பார்கள் நாங்கள் தாவா சொத்திற்கு அவ்வப்போது சென்று வருவோம். நானோ என் சகோதரர்களோ பட்டா 3ம் பிரதிவாதி பெயரிலும் ஸ்ரீரெங்கராஜ் பெயரிலும் உள்ளதற்கு ஆட்சேபணை செய்யவில்லை என்றால் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளோம், ஆட்சேபணை மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 20 ஏக்கர் 40 செண்ட் ஆகும். தாவா சொத்தின் காலை எண் விஸ்தீரணம் தெரியாது என்றால் சரியல்ல தெரியும். தாவா சொத்தின் காலை எண்ணை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் வைத்து தெரிந்து கொண்டேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கிராம நிர்வாக அலுவலகம் சென்று

விசாரித்த போது தான் தாவா சொத்தின் காலை எண்ணும், விஸ்தீரணமும் தெரியும் என்றால் சரியல்ல முன்பே தெரியும். நான் 2019 ம் வருடம் கிராம நிர்வாக அலுவலகம் சென்று தெரிந்துகொண்டேன். ராமராஜ் தான் தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என சொன்னார். தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் என் தாயார் பருவதம் என்பவர் கந்தசாமி கவுண்டரின் வாரிசு இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கோ என் சகோதரிக்கோ பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. என் தாயாரின் வாரிசு சான்றிதழை வாசாஆ 5 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 5 வாரிசு சான்று வழக்கு தாக்கல் செய்த பிறகு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 5 வாரிசு சான்றில் என் தாயாரின் தகப்பனார் பெயரான கந்தசாமி கவுண்டர் பெயர் உள்ளது என்றால் சரிதான். என் தாயார் பெயரில் தனிப்பட்ட வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். வாரிசு சான்றிதழை இவ்வழக்கிற்காக பெற்றேன் என்றால் சரிதான். வாசாஆ 5 ல் என் தாயாரின் தகப்பனார் பெயர் என் தாயார் பெயரில் நான் சொல்லி எங்கள் ஊரை சேர்ந்த வட்டாட்சியர் வைரமுத்து மூலம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வைரமுத்து எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். இறந்துபோன என் தாயாருக்கு அவருடைய தகப்பனாரும் தாயாரும் வாரிசுகள் ஆக மாட்டார்கள் என்றாலும் வட்டாட்சியர் வைரமுத்து உதவியுடன் வாசாஆ 5 ஆவணத்தில் என் தாயாரின் பெற்றோர் பெயரை சேர்த்து வாரிசு சான்று பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாசாஆ 6 வாரிசு சான்றை ரத்து செய்யக்கோரி பொள்ளாச்சி கோட்டாட்சியரிடம் நாங்கள் தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வந்ததாக சொல்வதற்கு நீதிமன்றத்தில் அடங்கல் போன்ற ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அடங்கல் என்னவென்று எனக்கு தெரியாது. அடங்கல் சிட்டா போன்றவற்றை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று தெரிந்து கொண்டேன் என்றாலும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தான் வழக்கு சொத்துக்கள் குறித்து காலை எண்ணும் விஸ்தீரணமும் தெரிந்து கொண்டேன்

என்றாலும் அதற்கு முன்பே இந்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பட்டா சிட்டா ஆகியவைகளை கிராம நிர்வாக அலுவலர் தான் எடுத்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். 2019ம் வருடம் பெற்றேன். கிராம நிர்வாக அலுவலர் பெயர் தெரியாது. அதற்கு முன்பு தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என தெரிந்து கொள்ளவில்லை என்றால் என் தாத்தா பெயரில் இருந்தது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஆவணங்கள் எடுத்து பார்த்தபோது தான் தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என தெரியவந்தது என்றால் சரிதான். ஸ்ரீரெங்கராஜீம், ராமராஜீம் தாவா சொத்துக்களை இரண்டாக பிரித்து ஆளுக்கு பாதியாக ஓட்டி வந்தார்கள் என்றால் சரியல்ல. மொத்தமாக ஓட்டி வந்தார்கள். தற்பொழுதும் மொத்தமாக ஓட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் எனக்கும் எவ்வித உரிமையும் சம்மதமும் பங்கும் இல்லை என்றால் சரியல்ல. தாவா 3ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி